මධ්‍යම පළාත් සභාව
மத்திய மாகாண சபை
CENTRAL PROVINCIAL COUNCIL

මධ්‍යම පළාත් ප්‍රධාන හා අධ්‍යාපන
மத்திய மாகாண பிரதான மற்றும் கல்வி
Central Provincial Chief And Education

Ministry of Finance and Planing, Law and order, Local Government and Provincial Administration, Man Power, Tamil Education and Muslim Schools Activities, Culture Affairs, Land, Trade and Commerce, Food Supplies and Distribution, Tourism, Sports and Investment Coordination Portfolios which are not taken under any other Ministries

மாகாண சபைக் கட்டடத் தொகுதி, பல்லேகலை, குண்டசாலை.
Provincial Council Complex, Pallekele, Kundasale.

மின் அஞ்சல்/E-mail : pcmcentral@gmail.com
இணையத்தளம்/ Website : www.cpcm.lk

| | | | | |
|---|---|---|---|---|
| அமைச்சு அலுவலகம் Ministry Office 081-4481322 | செயலாளர் Secretary 081-2424938 | சிரேஷ்ட உதவி செயலாளர் Senior Assistant Secretary 081-2424936 | பிரதான கணக்காளர் Chief Accountant 081-2424935 | தொலைநகல் Fax 0812424938 |


| | | |
|---|---|---|
| எனது இல. My No. CPC/CMS/1/30/Annual Transfer/2027 | உமது இல. Your No. | திகதி Date 2026.06. |

மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக,
வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக,
அனைத்து அதிபர்களுக்கும்.

**மத்திய மாகாண சபைக்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை அதிபர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறைக்கு அமைவாக விண்ணப்பங்கள் கோரல் சம்பந்தமாக**

கௌரவ ஆளுநரினால் 2024.07.25 ஆம் திகதியிட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள, மத்திய மாகாண சபைக்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை அதிபர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறை மற்றும் 2025.08.25 ஆம் திகதியிட்ட திருத்த இலக்கம் 01 ஆகியவற்றிற்கு அமைவாக, மத்திய மாகாண சபைக்குச் சொந்தமான மாகாண பாடசாலைகளின் இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கமைய, இவ்வமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான centralprovinceedu.lk இல் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை உரிய முறையில் பூர்த்தி செய்து, பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகின்றேன்.

2 விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது, மத்திய மாகாண சபைக்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை அதிபர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் அறிவுறுத்தல்கள் குறித்து அவதானம் செலுத்துமாறு அறியத் தருகின்றேன்.

i. இவ்விடமாற்றங்களுக்கு மாகாண சபை பாடசாலையொன்றில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையின் தரம் I, II மற்றும் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

ii. ஏதேனும் ஒரு பாடசாலையில் குறைந்தது 03 வருடங்களாவது சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

iii. 2026.12.31 ஆம் திகதியன்று ஒரே சேவை இடத்தில் தொடர்ச்சியான 06 வருட கால சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அனைத்து அதிபர் தர உத்தியோகத்தர்களும் கட்டாயமாக இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

CamScanner

iv. வருடாந்த இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது, மாகாண பாடசாலைகளில் அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு இடையில் மாத்திரமே இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படும். மேலும், மாகாண பாடசாலைகளின் நிரந்தர அதிபர் பதவிகளில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு வருடாந்த இடமாற்ற நடைமுறையின் கீழ் இடமாற்றங்கள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், நேர்முகப் பரீட்சைகள் மூலம் அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

v. கோரப்பட்ட சேவை இடங்களை வழங்குவதற்கு இடமாற்றச் சபையினால் எப்பொழுதும் முயற்சி எடுக்கப்படும் என்பதுடன், அவ்வாறு வழங்க முடியாவிடின் இடமாற்றச் சபையின் விருப்பத்தின் பேரில் வேறு தகுந்த பாடசாலையொன்றிற்கு இடமாற்றம் செய்யப்படுவர்.

vi. 58 வயது பூர்த்தியடைந்த உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் வேண்டுகோளின் பேரில் மாத்திரமே இடமாற்றம் வழங்கப்படும்.

vii. மிகக் கஷ்டமான மற்றும் கஷ்டமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கத் தகைமை பெறுவர். கஷ்டமற்ற, அனுகூலமான/இலகுவான மற்றும் மிகவும் அனுகூலமான/மிகவும் இலகுவான சேவைக்காலங்களைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் கட்டாயமாக இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவர்.

viii. அதிபர் தர உத்தியோகத்தர்கள் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் போது, அவர் தற்போது கடமையாற்றும் பாடசாலைக்கான நியமனக் கடிதத்தின் பிரதியொன்றைக் கட்டாயமாக இணைத்து அனுப்ப வேண்டும்.

ix. இலங்கை அதிபர் சேவையில் உள்வாங்கப்பட்ட, மேலதிக அடிப்படையில் (Supernumerary basis) நியமனங்களைப் பெற்றுள்ள தர உத்தியோகத்தர்கள் இருப்பார்களாயின், அவர்களும் இவ்விடமாற்றங்களுக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கத் தகைமை பெறுவர். (தொடர்புடைய உள்வாங்கப்பட்ட கடிதத்தின் பிரதியொன்று இணைக்கப்பட வேண்டும்).

x. மேலதிக அடிப்படையில் மாத்திரம் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றங்களுக்குத் தகைமை பெறமாட்டார்கள் என்பதுடன், விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

xi. மாகாண பாடசாலைகளில் அதிபர்களாகக் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும் போது, கௌரவ ஆளுநரினால் 2025.07.23 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட அதிபர் நியமனம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட வழிகாட்டலுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால், தமது தரத்திற்குப் பொருத்தமான பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதுபானி பியசேன,
செயலாளர்,
பிரதான மற்றும் கல்வி அமைச்சு,
மத்திய மாகாணம்.

CamScanner